முருகப்பெருமான் துணை

**மகான் சுந்தரானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.11.2022, திங்கட்கிழமை

1. ஆறுமுக சக்தியே அரங்கா
அன்னதான வள்ளலே தேசிகா
மாறுதலை கலியினில் நிகழ்த்த
மாதவராஜனாக வந்த ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் சுபகிருது துலைதிங்கள்
இனிமைபட எழுநான்குதிகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 28 ம் நாள் 14.11.2022 திங்கட்கிழமை)
இயம்பிடுவேன் சுந்தரானந்தர் யானும்
3. யானும் உலக நலம்பெற உரைப்பேன்
உயர்வான தருமவழி காட்டி
ஞானமருளும் அரங்கன் திருவடி
நம்பிக்கை வைத்து மக்கள் வர
4. வருகவே எங்கும் உலகினில்
வள்ளல்தன்மையான மாற்றம்
தரும வழிகளாகப் பரவியே
தரணியில் மாற்றம் காண்கும்
5. காண்கவே சமத்துவ சமதர்ம
கண்ணியமிக்க சமூக வழியாக
ஆன்மீக ஞான பலம் கொண்ட
அரங்கன் வழிகாட்டலில் உலகம்
6. உலகம் அமைதி பாதுகாப்பும்
உயர்வும் ஒற்றுமையும் கூடி
கலகம் பேரழிவு என்பதில்லா
காப்பானச் சூழலாக மாறும்
7. மாறுதலை தரும் அரங்கன்
மாதவசியிடம் சரணாகதிதனை
ஆறுதலாகப் பெற்ற மக்கள்
அனைவரும் ஞானிகள் ஆகும்
8. ஆகின்ற வாய்ப்புக் கிட்டி
அரங்கனால் தேற்றமடைவர்
மகிழவே சமூக நலம் காக்கும்
மகத்தான சக்திகளாகத் தேறி
9. தேறியே நல்லொழுக்கம் கொண்ட
தெய்வ நெறி பிறழாதபடி
அறிவுத் தெளிவும் மிகுந்து நன்கு
ஆணவம் களைந்த மக்களாக

10. ஆகவே ஆற்றல் பெருக்கி
ஆசாபாசங்களை கடந்துமே
செகத்தை காக்கும் வண்ணம்
சித்திமிகு மக்களாக மாற்றம்

11. மாற்றம் அரங்கனால் அடைந்து
மண்ணுலகில் ஞானத்தலைமைபட
ஆற்றல்மிக்க ஞான ஆட்சி படைப்பர்
அருளிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–